# உகண்டாவின் சர்வாதிகாரி இடிஅமீன் – ஒரு வரலாற்றுப் பார்வை

**ஜனனி, த. , அருந்தவராஜா.க**
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thankarasa1995janani@gmail.com

*கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள ஒருநாடு தான் உகண்டா. இந்நாட்டை ஆண்ட ஆட்சியாளர்களின் வரிசையில் ஒருவராக இடிஅமீன் கருதப்படுகின்றார். இவர் 1971 காலப்பகுதியில் உகண்டாவில் இராணுவப்புரட்சி நடத்தி ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். இடிஅமீன் 1971ஆம் ஆண்டு தொடக்கம் 1979ஆம் ஆண்டு வரை உகண்டாவை ஆட்சி செய்த சர்வாதிகாரியாக காணப்படுகின்றார். இடிஅமீன் ஆட்சியில் உகண்டாவானது அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாக பெரும் அழிவுகளையும் மாற்றங்களையும் சந்தித்தது. 1979ஆம் ஆண்டு இடிஅமீனின் சர்வாதிகார ஆட்சியிலிருந்து உகண்டா சுதந்திரம் அடைந்தது. தொடர்ந்து லிபியாவிற்கு தப்பிச்சென்ற இடிஅமீன் அங்கிருந்து சவுதிஅரேபியாவியாவின் ஜெட்டா நகரில் தஞ்சம் புகுந்தார். 2003 ஆம் ஆண்டு யூலையில் உயர் இரத்த அழுத்தம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இடிஅமீன் கோமா நிலைக்குச் சென்று 2003 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16 ஆம் திகதி உயிர் துறந்தார். மனித மாமிசங்களை உண்ட சர்வாதிகாரி இடிஅமீனது ஆட்சியானது உலகையே உலுக்கிய ஒரு வரலாறாகத் தற்காலம்வரை பேசப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆய்வின் நோக்கங்களாக உகண்டாவின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை எடுத்துக்காட்டுதல், சர்வதேசங்கள் இடிஅமீனுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி ஆராய்தல், இடிஅமீனை ஒரு சர்வாதிகாரியாக இனங்காட்டுதல், இடிஅமீனின் நடவடிக்கைகளை பிற சர்வாதிகாரிகளுடன் ஒப்பிடுவதன் மூலம் அவனின் ஆட்சிமுறைகளை வெளிக்கொணர்தல் போன்றன காணப்படுகின்றன. மேலும் இவ்வாய்வின் அணுகுமுறை யானது வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் அமைந்த விவரண மற்றும் ஒப்பியல் ஆய்வாகப் பார்க்கப்படுகின்றது. குறித்த இவ்வாய்வினை நேர்த்தியான வகையில் மேற்கொள்வதற்கு முதல்நிலை தரவுகள் என்ற வகையில் இடிஅமீன் ஊடகங்களுக்கு வழங்கிய நேர்காணல்கள், இடிஅமீனது உரைகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகள் வரிசையில் நூல்கள் பத்திரிகைகள், கட்டுரைகள், இணையத்தரவுகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன.*

**திறவுச் சொற்கள் :** இராணுவம், சர்வாதிகார ஆட்சி, கொடுரமான ஆட்சி, பிரித்தானியா